**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**IDOP No. 74/2025**

**நாள்.03.03.2026**

ம.சா.1 திரு.சசிகலன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எங்களது திருமணம் இரு தரப்பினர்களது சம்மதத்தோடு நடந்தது என்றால் சரிதான். திருமணத்தின்போது எனக்கு என்னென்ன நகை போட்டார்கள் என்ற விவரமும், எதிர்மனுதாரருக்கு என்னென்ன நகை போட்டார்கள் என்ற விவரமும் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லித்தான் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள மனுவில் 5 வது பத்தியில் சொன்னதற்கு ஏதுவாக, நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் திருமணம் ஆகி எத்தனை மாதத்திற்குள் வெளிநாடு சென்றேன் என்றால் 1 மாத காலத்திற்குள் சென்றுவிட்டேன். அவ்வாறு நான் வெளிநாடு செல்வது சம்மந்தமாக திருமணத்தின்போதோ, சம்மதத்தின் போதோ, திருமண நிச்சயத்தின் போதோ பேசிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. திருமணம் முடித்து நான் வெளிநாடு செல்வதற்காக ஆன செலவுகளை எதிர்மனுதாரரின் நகைகளை அடமானம்வைத்துதான் செய்தேன் என்றால் சரியல்ல. நான் வெளிநாடு சென்றதற்கு தோராயமாக ரூ.10,00,000/- செலவாகியிருக்கும் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு முன்பே எனது குடும்பத்திற்கு நிறைய கடன்கள் இருந்தன என்றால் சரியல்ல. மேற்படி குடும்ப கடன்களையும், திருமணத்திற்காக வாங்கிய கடன்களையும் எதிர்மனுதாரரின் நகைகளை அடமானம் வைத்துத்தான் தீர்த்தேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரின் நகைகளை அழித்துவிட்டு,



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.03 17:28:26 +0530

வழக்கிற்காக பொய்யாக நகைகளை எதிர்மனுதாரர் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டார் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

இது சம்மந்தமாக 16.05.2024 ம் தேதி எதிர்மனுதாரர் இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அப்போது ரூ.7,00,000/- எதிர்மனுதாரருக்கு தருவதாக ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் மிரட்டி கையொப்பம் வாங்கிக்கொண்டார்கள். அன்றைய தினமே நான் ரூ.50,000/- கொடுத்தேன் என்றால் என் அண்ணனை மிரட்டினார்கள், அவர் பயந்து கொடுத்துவிட்டார்.

நான் வாங்கிய ரூ.7,00,000/- பற்றிய உண்மை என் அண்ணனுக்கு தெரியும் என்பதால்தான் என் அண்ணன் என் சார்பாக அன்றைய தினம் முன்பணமாக ரூ.50,000/-த்தை கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று நடந்துகொள்ளவில்லை என்பதால் இராமேஸ்வரம் நீதிமன்றத்தில் மேற்படி தொகையை கேட்டு குடும்பவன்முறை சட்டத்தின் கீழ் மனு செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கு போட்டபின்னர்தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் தாம்பத்திய உறவில் இருப்பதை வீடியோ எடுத்து அதை Facebook-ல் போட்டுவிடுவேன் என்று பணம் கேட்டு மிரட்டியதால்தான் எதிர்மனுதாரர் என்னுடன் வாழ முடியாது என்று பிரிந்துவிட்டார் என்றால் சரியல்ல.

திருமணம் முடிந்தது முதல் நானும், எனது குடும்பத்தார்களும் எதிர்மனுதாரரிடமும் அவரது குடும்பத்தினரிடமும் பணம் வாங்குவதிலேயே குறிக்கோளாக இருந்தோம் என்றால் சரியல்ல. திருமணம் ஆன 3 மாதத்திலேயே நாங்கள் வரதட்சணை கேட்டதால்தான் எதிர்மனுதரர் என்னுடன் வாழாமல் பிரிந்து வந்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரரிடம் தொடர்ந்து பலமுறை வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாலும், ஆபாச வீடியோக்களை எடுத்து facebook-ல் போடுவதாக மிரட்டியதாலும், என்னுடன் சேர்ந்து வாழ



MEHBUB ALI KHAN A K Digitally signed by MEHBUB ALI KHAN A K Date: 2026.03.03 17:28:28 +0530

முடியாத காரணத்தினால்தான் அவர் பிரிந்து சென்றுவிட்டார் என்றால் சரியல்ல. அவர் தற்போது என்னுடன் வாழ விரும்பவில்லை என்றுதான் எதிர்உரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

நான் வழக்கிற்காக எதிர்மனுதாரர் வேறொரு நபருடன் தொடர்பில் உள்ளதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும், உண்மையை மறைத்து பொய்யாக மனு கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரரின் நகைகளை அடகுவைத்து அதனை அழித்துள்ளேன் என்றாலும், அதனை மறைக்க பொய்யான விவரங்களை கூறி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.03 17:28:32 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .